*International Multidisciplinary Innovative Research Journal*
*-An International refereed e-journal*

ISSN: 2456 – 4613
Volume – IV Issue – 2
May -2020

# பாண்டிய நாட்டுத் திருமடங்கள்

கயல்விழி.மு,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி,
காஞ்சிபுரம்-631502, தமிழ்நாடு, இந்தியா.

**Corresponding Author** : kayalarul22@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**:-

தமிழ்வளர்த்த பாண்டியநாட்டில் ஆலயங்களும், மடங்களும் போட்டியிட்டுக் கொண்டு செழித்தன. பாண்டியநாடு முழுவதும் பரவிக்கிடந்த இத்திருமடங்கள் அந்நாட்டு மக்களிடமிருந்து பிரிக்கவியலா இடம் பிடித்தன. அந்நாட்டுமக்கள் ஆலயங்களையும், மடங்களையும் இருகண்களாகக் கருதினர். இவை இரண்டும் வெறும் சமயப் பருப்பொருள்நிலையங்களாகச் செயல்படாமல் மிகுந்த சமூகஉணர்வுடன் செயல்பட்டன. பாண்டியநாட்டுத் திருமடங்களைப் பற்றி ஆராய்வது அந்நாட்டுமக்களின் சமயவாழ்வை ஆராய்வதாகக் கொள்ளவேண்டும்.

**குறிப்புச்சொற்கள்**:- சைவ- வைணவமடங்கள், சமயவாழ்வு, அமைப்பு, பணிகள், சமூகநிறுவனங்கள், நூலகங்கள், சேவைகள்.

**முன்னுரை**:

சமயங்கள் மனிதவாழ்வுடன் பின்னிப் பிணைந்தவை. அவை எப்போதும் மனிதனை நல் வழிப்படுத்தும் ஊக்கிகளாய்ச் செயல்பட்டு வருகின்றன. இச்சமயங்களே அவனைப் பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கு ஆற்றுப்படுத்துகின்றன. இவ்வகைச் சமயங்களின் பருப்பொருள் வடிவங்களாய் ஆலயங்கள் திகழ்கின்றன. எல்லாச் சமயத்தவரும் ஆலயம் தொழுதலை இன்றியமையாத பணியாகக் கருதுவர். இத்தகு சிறப்புடைய ஆலயங்களுடன் நெருங்கிய பிணைப்புக் கொண்டவையே

திருமடங்களாகும். இம்மடங்கள் உலகவாழ்வின் நிலையாமையை உணர்ந்த பெரியோர்கள் தவவாழ்வு வாழ்வதற்கான துறவு இல்லங்களாகும். இத்துறவுமடங்கள் அங்கு வசிப்போருக்கு உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை வழங்குவதுடன் அவர்கள் புலன்களைவென்று வாழும் வாழ்விற்கு உரிய பயிற்சியையும் நல்குகின்றன. துறவுமடங்களின் வரலாறு ம் தொன்மை வாய்ந்தது. இதற்குச் சான்றாக இடைக்கால ஐரோப்பாவில் காணப்பட்ட மடாலய(Monastery) முறையைச் சொல்லலாம்.

பாண்டியநாட்டின் துறவு மடங்கள் பழைமை வாய்ந்தவை. ஆரம்பத்தில் சமண, பௌத்தத் துறவிகளால் இவை உருவாக்கப்பட்டன. அவ்விரு சமயங்களும் வீழ்ச்சியடைந்த பின் இந்துசமயம் சார்ந்த மடங்கள் வளர்ச்சியுற்றன. குறிப்பாகச் சைவ, வைணவத் திருமடங்கள் நன்கு வளர்ந்தன. இம்மடங்களில் வசிக்கும் சமயத்துறவிகளை அக்காலச் சமூகம் மிகவும் மதித்துப் போற்றி வந்தது. மன்னர்களும், செல்வர்களும் அதிகாரவர்க்கத் -தினரும் இம்மடங்களை நன்கு புரந்தனர்[1]. தமிழ் வளர்த்த பாண்டிய நாட்டில் ஆலயங்க -ளும்மடங்களும் போட்டியிட்டுக் கொண்டு செழித்தன. பாண்டியநாடு முழுவதும் பரவிக்கிடந்த இத்திருமடங்கள் அந்நாட்டு மக்களிடமிருந்து பிரிக்கவியலா இடம் பிடித்தன. அந் நாட்டு மக்கள் ஆலயங்களையும் மடங்களை -யும் இரு கண்களாகக் கருதினர். இவை இரண்டும் வெறும் சமயப் பருப்பொருள் நிலையங்களாகச் செயல்படா- மல் மிகுந்த சமூகஉணர்வுடன் செயல்பட்டன. பாண்டிய நாட்டுத் திருமடங்களைப் பற்றி ஆராய்வது அம்மக்களின் சமயவாழ்வை ஆராய்வதாகக் கொள்ளவேண்டும். அந்நாட்டுச் சமயவரலாற்றை ஆராயும் ஆய்வாளர் எவரும் அங்குமடங்கள் பெற்றிருந்த செல்வாக்கை எளிதில் உணர்வர்.

**பாண்டியநாட்டில் சைவமடங்கள்**

பாண்டிய மன்னர்கள் தீவிரச்சைவர்கள்[2]. எனவே அவர்கள் சைவநெறிசார்ந்த கோயில்களையும் மடங்களை-யும் இயல்பாகவே ஆதரித்தனர். பாண்டிய மன்னர்கள் தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகக் கருதிப் போற்றினர். அக்காலமடங்கள் துறவிகள் தங்கும் இடங்களாகச்

செயல்பட்டதோடல்லாமல் வழிப் போக்கர்கள் தங்கும் இடங்களாகவும் செயல்பட்டன. சைவசமயத்தின் பிரிவுகளான பாசுபதம், காளாமுகம், காபாலிகம் போன்ற பிரிவினரின் மடங்கள் பாண்டிய நாட்டில் பரவிக் காணப்பட்டன. மதுரை மாநகர் காளாமுகப் பிரிவின் கேந்திரியமாகத் திகழ்ந்தது. அங்குக் காளாமுக சமயத்தலைவர்கள் பலர் வாழ்ந்து வந்தனர். நாடு முழுவதும் உள்ள காளாமுகப் பிரிவினரின் மடங்களில் மதுரையைச் சார்ந்தவர்களே மடாதிபதிகளாகப் பணியாற்றும் பேறு பெற்றனர். சான்றாகக் கொடும்பாளூரில் செயல்பட்ட காளமுகமடத்தின் தலைவராக மதுரையைச் சார்ந்த மல்லிகார்ஜீனர் என்பவர் பணியாற்றியதைக் கொள்ள-லாம்.[3] இது தவிரச் சைவ சித்தாந்தக் கருத்துக்களைப் போதிக்கும் பல மடங்கள் பாண்டிய நாட்டில் காணப்பட்டன. அம்மடங்கள் மெய்கண்ட சாத்திரங்களைப் போதித்துவந்தன.

பாண்டியநாடு முழுவதும் சைவ சமயமடங்களின் ஆதிக்கமே மேலோங்கிக் காணப்பட்டது. அவை பல்வேறு இடங்களில் காணப்பட்டன. பாண்டியநாட்டில் திருச்சுழி என்ற ஊரில் மாவிரதிகள்மடம் ஒன்று செயல்பட்டது.[4] திருக்குற்றாலத்தில் உள்ள குற்றாலநாதர் கோவிலைச் சார்ந்து ஒரு சைவமடம் செயல்பட்டுவந்தது.[5] அதைப் பாசுபதர்கள் நடத்திவந்தனர். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் திருவானைக்கோவிலில் திருக் கொடுங்குன்றத்து முதலியார் மடம் செயல்பட்டது. வீரபாண்டியன் காலத்தில் சேலத்தில் கிளிவண்ணமுடைய நாயனார்மடம் என்ற பெயரில் ஒரு திருமடம் காணப்பட்டது.[6] முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் திருவேந்திபுரத்தில் இரண்டாயி - ரவன் மடம் என்ற பெயரில் ஒரு மடம் இயங்கிவந்தது.[7] புகழ்பெற்ற புதுக்கோட்டை குடுமியான்மலையில் நாற்பத் தெண்ணாயிரவர்மடம் என்ற மடம் காணப்பட்டது. முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டி - யன் காலத்தில் தஞ்சையின் அத்தியான் பள்ளியில் அகத்தி - யத் தேவர்மடம் காணப்பட்டது.[8] திருத் துறைப் பூண்டியில் மாறவர்மன் குலசேகர பாண்டி - யன் காலத்தில் கோமடம் ஒன்று

செயல்பட்டது.[9] இம் மடத்தின் தலைவர்களாகச் "சைராசி", மற்றும் "ஞானராசி" போன்றோர் பணியாற்றினர். செங்கல்பட்டுக்கு அருகில் உள்ள பொன்விளைந்த களத்தூரில் காளாமுகச் சமயமடம் ஒன்று செயல்பட்டது.

இது தவிரப் பாண்டியநாட்டின் பல பகுதிகளில் கோளகிமடங்களும் செயல்பட்டன. இதன் உட்பிரிவுகளான பாசுபதம், லகுலீசம் போன்ற பிரிவினரின் மடங்களும் தனித்தனியே காணப்பட்டன.[10] சான்றாகத் திருச்செந்தூர்வட்டம் ஆத்தூரில் கி.பி. 1250 இல் கோளகிமடம் ஒன்று செயல்பட்டதைக் கொள்ளலாம். புகழ்பெற்ற மதுரையில் விஷகண்ட தேவசந்தான மடம், பட்ட வீர சந்தான மடம், திருவாரூர்மடம், அழகியநாயக்கச் சந்தானமடம் போன்ற பல மடங்கள் சமயப் பணியாற்றின.[11] மேலும் மதுரையில் பிக்ஷாமடம் என்ற மடம் ஒன்று செயல்பட்டது. இது சைவசமயத்தைச் சா□□ந்தது என்று கே.வி. இராமன் போன்ற ஆய்வாளர்களும்[12] கோளகிப் பிரிவைச் சார்ந்தது என்று திரு.மா.இராசமாணிக்கனார் போன்றோரும் கருதுவர்.[13] முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தில் திருப்பத்தூரில் திருஞான சம்பந்த மடமும், திருத் தொண்டர்த்தொகை மடமும் காணப்பட்டன.[14] இம்மடங்களின் தலைவராக "ஸ்ரீகாந்தம்" என்ற சமயப் பெரியார் பணியாற்றினார். கல்குளம் என்ற ஊரில் உள்ள நல்லபெருமாள் மடத்தில் "ஈசானதேவர்" என்ற பெரியார் மடாதிபதியாகப் பணியாற்றிச் சிறப்புற்றார்.[15] மதுரையில் உள்ள இடைக்காட்டூரில் திருவாரூர் கீழை மடம் காணப்பட்டது. இம்மடத்தின் மடாதிபதியாக இரண்டாம் ஜடாவர்மன் சுந்தர பாண்டியனின் குருவான "தற்புருஷம்சிவன்" என்ற சமயக்குரு பணிபுரிந்தார்.[16] இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் இராமேஸ்வரத்தில் சுந்தர பாண்டியன் மடம் செயல்பட்டது.[17] இதே மன்னன் தன் அத்தையின் நினைவாகத் திருநெல்வேலியில் நம்பிராட்டி மடம் என்ற மடத்தை நிறுவினான்.[18]

**பாண்டியநாட்டில் வைணவ மடங்கள்:**

பாண்டிய மன்னர்கள் சைவர்கள் என்ற போதிலும்

வைணவத்தையும் நன்கு ஆதரித்து வந்தனர். பாண்டியநாட்டு வைணவ மடங்கள் சிறப்புடன் பணியாற்றி வைணவத்தை வளர்த்தன. பாண்டியநாட்டின் பல பகுதிகளில் இது போன்ற வைணவ மடங்கள் காணப்பட்டன. பாண்டிய மன்னர்கள் சமயப் பொறை மிக்கவர்கள் என்பதற்கு அவர்கள் வைணவ மடங்களுக்குக் காட்டிய ஆதரவே சிறந்தசான்றாகும். பாண்டியநாட்டில் காணப்பட்ட வைணவமடங்கள் சிறப்பான முறையில் சமயப் பணியாற்றின. முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் நடுவிற்கூற்றத்தில் சுந்தரபாண்டியன்மடம் என்ற வைணவமடம் செயல்பட்டது.[19] இது திரிதண்ட சன்னியாசி களுக்காக ஏற்படுத்தப்பட்டது. இதே போன்று இப்பெயரிலே திருவரங்கத்தில் செயல்பட்ட மற்றொரு மடம் வைணவத் துறவிகளுக்காகவே ஏற்படுத்தப் பட்டது.[20] புகழ்பெற்ற அழகர் கோவிலில் திருநாடுடையார் மடம் என்ற மடம் காணப்பட்டது.[21] இதே இடத்தில் குலசேகரமடமும் சிறப்புடன் செயல்பட்டது.[22]திருக்குறுங்குடி-யில் திருநங்கைமடம் என்ற மடம் காணப்பட்டது.[23] திருநகரில் அருளானந்ததாசன் மடம் காணப்பட்டது. திருக்குருகூரில் மாமுனவர் மடம் என்ற மடம் செயல்பட்டது. இத்துடன் சேரன்மாதேவியிலும் முடிவழங்கும் பெருமாள் என்ற மடமும் சிறப்புடன் வைணவச் சமயப் பணியாற்றியது.[24]

**பாண்டியநாட்டில் மடங்களின் நிலை**:

பாண்டிய நாட்டின் திருக் கோயில்களைப் போன்றே திருமடங்களும் சிறப்புற்றுத் திகழ்ந்தன. இவற்றின் வளர்ச்சிக்காகப் பாண்டிய மன்னர்கள் பல வித நிவந்தங்களை வாரி வழங்கினர். மடங்களுக்கென்று தனியாரும் நிலங்களைத் தானமாக வழங்கினர். சான்றாகப் பாண்டியமன்னர்கள் காளையார்கோவிலில் உள்ள தட்சிணக்கோளகி மடத்திற்கு இடைக்காட்டூரில் உள்ள நிலங்களைத் தானமாக வழங்கினர். இந்நிலங்களிலி - ருந்து வரும் வருவாயைக் கொண்டு தேசாந்திரிகளுக்கும் புலவர்களுக்கும் கோயில் பணியாளர்களுக்கும் உணவு வழங்கப்பட்டது. இது தவிர வைணவமடங்களில் திரிதண்டி

சந்நியாசிகளுக்கும் ஏகாந்தச் சந்நியாசிகளுக்கும் உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. பாண்டிய நாட்டுத் திருமடங்கள் அம்மடத்தின் தலைவர்களான மடாதிபதிகளின் சிறப்பான நிர்வாகத்தில் செயல்பட்டு வந்தன. மடாதிபதிகளுக்கு உதவ “ஸ்ரீகாரியம்” என்ற அலுவலரும் பணியாற்றி வந்தார்.[25] இது தவிரக் குற்றேவல் புரியப் பணியாளர்கள் பலர் நியமிக்கப் பட்டனர். இவர்களுக்கான ஊதியம் கோயில் வருவாயிலிருந்து வழங்கப்பட்-டது. மடத்தின் கணக்கு வழக்குகள் முறையாகப் பராமரிக்கப்பட்டு வந்தன. தேவைப்படும் போது அரசினரால் அனுப்பப்படும் அலுவலர்கள் கணக்கு வழக்குகளைச் சரிபார்த்தனர்.

பாண்டியர்கால மடங்கள் சிறந்த கல்வி நிறுவனங்களா - கவும் செயல்பட்டன. அங்குச் சிறார்களுக்குச் சமயப் போதனை வழங்கப்பட்டது. திருப்பத்தூரில் இருந்த பிக்ஷாமடத்தில் சைவ சித்தாந் -தங்களில் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் இருந்தனர். சாக்கோட்டையில்“பவிதாச்சாரி-யர் தட்சிணாமூர்த்தி” என்ற ஆசிரியர் தலைமையில் ஒரு மடம் இருந்தது.[26] அதற்குப் பாண்டியன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் நிலங்களைத் திருமட வளாகமாக வழங்கினான். மேலும் இம்மடங்கள் சிறந்த நூல் நிலையங்களாகவும் செயல்-பட்டன. இவை “சரஸ்வதி பண்டாரங்கள்” என்று அழைக்க - ப்பட்டன. இங்குப் பழம் ஓலைச் சுவடிகள் யாவும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டன.

வைணவமடங்களில் வேதம், உபநிடதம், இதிகாசம், புராணங்கள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களின் உரைகள் போன்றவை மாணவர்களுக்குப் பயிற்சியளிக் - கப்பட்டன. இதற்காக வடமொழி, தமிழ்மொழியின் இலக்கண, இலக்கியப் பயிற்சியும் வழங்கப்பட்டன. சான்றாக ஆழ்வார்திருநகரி -யிலிருந்த அருளாளதாசன் மடத்தில் மாணவர்கள் பலர் தங்கிக் கல்வி கற்க வசதி ஏற்படுத்தப்பட்டது. இதைத் திருக்குருகூர் மாமுனிகள் என்ற பெரியார் தொடங்கிவைத்தார். சிதம்பரத்தில் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் ஒரு சரஸ்வதி பண்டாரம் செயல்பட்டது. இதை “சுவாமிதேவர்” என்ற அறிஞர் தொடங்கி வைத்தார். இந்நூலகத்தை “பல்லவதரை-யன் ” என்னும் அதிகாரி சிறப்புடன்

 IMIRJ-IV(2) ISSN:2456

நிர்வகித்து வந்தான். இங்கு ஏராளமான ஓலைச்சுவடிகள் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வோ- லைச் சுவடிகளைப் பார்த்து எழுதுவதற்கும் பிழை திருத்துவதற்கும் 20 அறிஞர்கள் பணியாற்றினர்.[27] இதேபோன்று சேரன்மாதேவியிலும் ஒரு சரஸ்வதி பண்டார நூலகம் சிறப்புடன் செயல்பட்டுவந்தது. இங்கு மாணவர்களுக்கு வேதமும் புராணமும் இதிகாசங்களும் சிறப்பாகப் போதிக்கப்பட்டன. பாண்டியர் காலத்தில் சேரன்மாதேவி -யிலும் சிதம்பரத்திலும் உள்ள மடங்கள் சிறந்த கல்விநிறுவனங்கள் என்ற சிறப்பைப் பெற்றன. பலதரப்பினரின் ஆதரவால் பாண்டியர்கால மடங்கள் செல்வ வளத்திலும் அதிகாரப் பலத்திலும் ஆளுமைத் திறனிலும், நிர்வாக மேம்பாட்டிலும் சிறந்து விளங்கின. அவை சமயப் பணியுடன் சமூகப் பணியும் ஆற்றின. புயல், வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றம் மிகுந்த காலத்தில் மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து அவர்களைக் காத்தன. திருமடங்கள் அவைசார்ந்த மக்களின் சமூகப் புகலிடங்களாய்த் திகழ்ந்தன. அவை பொதுமக்கள் கூடுமிடகவும் கூட்டங்கள் நடத்துமிடங்களாகவும் முக்கிய முடிவுகள் எடுக்குமிடங்களாக -வும் செயல்பட்டன.

**முடிவுரை**:

தென்தமிழ்நாட்டைச் சார்ந்த பாண்டியநாட்டு மக்கள் பழைமையும் பெருமையும் சிறப்பும் ஒருங்கே கொண்டவர்கள். அவர்கள் தமிழையும் சமயத்தையும் உயிரெனப் போற்றிய பண்பாளர்கள். அவர்களின் வாழ்வும் சமுதாயமும் ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டவை. எனவே அவர்கள் திருக் கோயில்களையும் திரு மடங்களையும் வைதீகச் சமயத்தின் இரு கண்களாகக் கருதி வந்தனர். இவ்விதமடங்கள் ஒழுக்கம், இறைபக்தி, கட்டுப்பாடு மற்றும் தூய்மை ஆகிய விழுமியங்களை உடைய ஆன்மிகப் பெரியார்களைக் கொண்டதால் தனிச்சிறப்பு பெற்றன. இதே போன்று இடைக்கால ஐரோப்பிய மடங்கள் புகழ் பெற்ற வையாகத் திகழ்ந்த போதிலும் அவற்றில் ஒழுக்கக் கேடுகளும் குறைபாடு -களும் ஊழல்களும் சீர்கேடுகளும்

மலிந்து காணப்பட்டன. மாறாகப் பாண்டியநாட்டு மடங்கள் தூய்மையின் இருப்பிடங்களா -கத் திகழ்ந்தன.[28] எனவே அனைத்துத் தரப்பினரிடத்தும் இம்மடங்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றன. இம்மடங்களுக்குப் பல தரப்பினரும் வழங்கிய கொடைகளே இவற்றை நன்கு உணர்த்தும். பாண்டியநாட்டில் சைவ, வைணவச் சமயப்பூசல்கள் இருந்தாலும் பாண்டிய மன்னர்கள் சமய வேறுபாடு இன்றி இவ்விரு சமயங்களையும் நன்கு ஆதரித்து வந்தனர். எனவே அவ்வழியே நின்று இவ்விரு சமயத்தின் மடங்களையும் அவர்கள் ஆதரித்துப் போற்றினர்.

பொதுவாக அக்கால மடங்கள் யாவும் கோயில்களை ஒட்டியே அமைந்திருந்தன என்பதால் அவ்வாலயங்களின் வளர்ச்சியோடு மடங்களும் நன்கு வளர்ந்தன. பாண்டியநாட்டில் மடங்களின் வளர்ச்சி வைதீகச் சமயத்தின் வளர்ச்சியாகவே பார்க்கப்பட்டது. ஐரோப்பாவில் இயங்கிய மடங்களைக் கண்டு ஐரோப்பிய மன்னர்கள் அஞ்சி நடந்தனர். அவை சமூகத்தில் பெற்றிருந்த அபரிமிதமான செல்வாக்கே இதற்குக் காரணமாகும். மேலும் அங்குள்ள மடங்கள் சமயத்தோடு அரசியலையும் இணைத்துத் தம் செல்வாக்கை நிலை நாட்டின. அவ்வாறில்லாமல் பாண்டிய நாட்டு மடங்கள் சமயப்பணி மட்டும் ஆற்றின. அவை தம் தூய்மையான வாழ்க்கைக்காகவும் உயரிய கோட்பாடுகளுக்காகவும் பரந்த சிந்தனைகளுக்காகவும் திட்டமிட்ட செயல் திறன்களுக்காகவும் சீரிய சமயப்பணிகளுக்காகவும் மன்னர்கள் முதல் அனைத்துத் தரப்பினரின் ஆதரவையும் பெற்றன. பாண்டியநாட்டுத் திருமடங்கள் பழம்பெருமை மிக்க அந்நாட்டுமக்களின் சமயவாழ்வினை எடுத்துக் காட்டும் காலக்கண்ணாடி என்றால் அது மிகையாகாது.

**சுருக்கம்** (Abbr evat i ons):

1.ARE-Annual Report on Indian Epigraphy
2.SII-South Indian Inscriptions

**அடிக்குறிப்புகள்**:

1.தமிழ்நாட்டு வரலாறு-பாண்டிய பெருவேந்தர் காலம், ப:217

2.ARE.No:313/1948-49 & SII Vol:4, No:628

3.ARE.No:101/1915

4.SII.Vol.14.No:66

5.SII.Vol.4.No:426

6.SII.Vol.4.No:152

7.SII.Vol.8.No:761

8.SII.Vol.12.No:550

9.SII.Vol.8.No:226

10.ARE.No:359/1916

11.ARE.No:427/1929-30

12.கே.வி.இராமன், பாண்டியர்வரலாறு, பக்.**212–213**.

13.மா.இராசமாணிக்கனார், சைவ சமய வளர்ச்சி,ப.**212**.

14.ARE.No:104/1908

15.ARE.No:2/1909

16.SII.Vol.5.No:301

17.ARE.No:197/1943-44

18.ARE.No:292/1914

19.ARE.No:99/1937-38

20.ARE.No:122/1937-38

21.ARE.No:277/1929-30

22.ARE.No:279/1929-30

23.ARE.No:350/1959-60

24.ARE.No:523/1958-59

25.கே.வி.இராமன், பாண்டியர்வரலாறு, ப:217

26.ARE.No:52/1946-47

27.மேற்படி ப:217

28.மேற்படி ப:250

## துணைநூற்பட்டியல் (Bibliography):

1.Nilakanta Sastri.K.A,(1929), The Pandyan Kingdom, London: Luzac& Co

2.Pillay.K.K.(1969) A Social History of the Tamils, Volume1, Chennai, University of Madras.

3.Swaminathan.A,(1984),Social and Cultural History of Tamil Nadu, Chennai, Deepa Pathippagam.

4.Raman.K.V.(1972),Some Aspects of Pandian History in the Light of Recent Discoveries, Chennai, University of Madras

**5**.பிள்ளை.கே.கே., (2013). தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.

**6**.இராசசேகரதங்கமணி. ம., பாண்டியர் வரலாறு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, (1978)

**7**.இராமன்.கே.வி., **(1977),** பாண்டியர் வரலாறு, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம். சென்னை,)

**8**.சதாசிவ பண்டாரத்தார்.தி.வை., **(1972),** பாண்டியர் வரலாறு, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

9.தமிழ் நாட்டு வரலாறு(2000) பாண்டிய பெருவேந்தர் காலம், சென்னை, தமிழ்வளர்ச்சித் துறை,

**10**.நீலகண்டசாஸ்திரி.க.அ., (1979) தென்னிந்திய வரலாறு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம். சென்னை,

**11**.இராசமாணிக்கனார்.மா., (1958) சைவ சமயவளர்ச்சி, பூங்கொடி பதிப்பகம். சென்னை,